Fullerton India
Rishta Sammaan Ka

# ஒரு முறைக்கான (ஒன் டைம்) லோன் ரீஸ்ட்ரக்ச்சரிங்-ல் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (தமிழ்)

## 1. ஆர்.பி.ஐ ஆல் அங்கீகரிக்கப்பட்ட லோன் ரீஸ்ட்ரக்ச்சரிங் என்றால் என்ன? இந்த ரெசொல்யூசன் ஃப்ரேம்வொர்க்-ன் நோக்கம் என்ன?

கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார வீழ்ச்சியானது நாடு முழுவதும் இருக்கும் மில்லியன் கணக்கான மக்களை கடன் வாங்கும் சூழ்நிலைக்கு தள்ளியுள்ளது, இதற்கான ரெசொல்யூசன் திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஆர்.பி.ஐ ஆனது வங்கிகள் & கடன் கொடுக்கும் பிற நிறுவனங்களுக்கு ஒரு ஃப்ரேம்வொர்க் ஐ வழங்கியுள்ளது. கோவிட் -19 தொற்றுநோயின் விளைவாக நிதி ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளவர்களின் கடன் தொகைக்கு நிவாரணம் வழங்குவதுதான் இந்த ஃப்ரேம்வொர்க்கின் நோக்கமாகும்.

இந்த ஃப்ரேம்வொர்க் மற்றும் அதன் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின் அடிப்படையில், கோவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் பெறப்பட்ட கடன்களை மறுசீரமைப்பதற்கு ஃபுல்லர்டன் இந்தியா தன்னுடைய கொள்கையை வடிவமைத்து வருகிறது.

## 2. லோன் ரீஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு யாரெல்லாம் தகுதியானவர்?

லோன் ரீஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு ற்கான அடிப்படைத் தகுதியானது இங்கே கொடுக்கப்பட்டுள்ளது:

1. மார்ச் 01, 2020 வரை இ.எம்.ஐ / வட்டி செலுத்துதலில், விண்ணப்பதாரருக்கு 30 நாட்களுக்கு மேலான ஓவர்ட்யூ இருக்கக்கூடாது. வங்கிகளிடமிருந்து கடன் வாங்குவதாலும் மற்றும் என்.பி.எஃப்.சி ஆனது 25 கோடிக்கு கீழே இருப்பதாலும், இந்த காலமானது எம்.எஸ்.எம்.இ கடன் வாங்குபவர்களுக்கு 89 நாட்களாக இருக்கும்.
2. கோவிட்-19 தொற்றுநோயின் காரணமாக, இழப்பு அல்லது குறைவான சம்பளம் / பணப்புழக்கம் போன்றவற்றின் அடிப்படையில் விண்ணப்பதாரர் நிதி ரீதியாக பாதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

தயவு செய்து கவனிக்கவும்:

1. விண்ணப்பதாரரின் குறைவான வருமானம் மற்றும் இதனால் அவருக்கு ஏற்பட்ட நிதி பாதிப்பு போன்றவற்றை, கடன் வாங்குபவர் வழங்கிய துணை ஆவணங்களின் தகவல் அடிப்படையில் ஃபுல்லர்டன் இந்தியா மதிப்பீடு செய்யும்.

2. ரெசொல்யூஷன் திட்டத்தை அங்கீகரிப்பதற்கு முன்பு விவாதங்கள் மற்றும் மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தப்பட்ட இ.எம்.ஐ / ஒத்துக்கொண்ட வட்டி போன்றவற்றை விண்ணப்பதாரரால் மீண்டும் செலுத்த முடியுமா என்பதை ஃபுல்லர்டன் இந்தியா மதிப்பீடு செய்யும்.
3. விண்ணப்பதாரர் பணத்தை திருப்பி செலுத்தியதற்கான ஹிஸ்டரி மற்றும் மார்ச் - ஆகஸ்ட், 2020 க்கு இடையில் ஆர்.பி.ஐ மொரோட்டோரியத்திற்காக கொடுக்கப்பட்ட பதில்களை ஃபுல்லர்டன் இந்தியாவும் பரிசீலிக்கும்.

## 3. லோன் ரீஸ்ட்ரக்ச்சரிங் ஐ நான் தேர்வு செய்ய வேண்டுமா?

புதிய வருமானத்திற்கான ஆதாரங்களை நீங்கள் கண்டுபிடிப்பதன் மூலம் அல்லது நீங்கள் உங்களுடைய செலவுகளை நிர்வகிக்கப்பதன் மூலம், நீங்கள் உங்களுடைய மாதாந்திர இ.எம்.ஐ-ஐ செலுத்த முடிந்தால், அதை நீங்கள் செய்யுங்கள் என்று நாங்கள் உங்களை கண்டிப்பாக அறிவுறுத்துகிறோம். எனவே நீங்கள் தேவையில்லாமல் வேறெந்த திட்டத்தையும் தேர்வு செய்ய வேண்டாம்.

ஏன் என்றால் லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் ஆனது பின்வரும் விளைவுகளைக் கொண்டுள்ளது:

KYONKI DIL AAPKI
NAHI SUNTA,
HUM AAPKI SUNTE HAIN.
#RishtaSammaanKa

1. லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் ற்கு கூடுதல் கட்டணம் விதிக்கப்படலாம், இது உங்களுடைய செலவை அதிகரிக்கும்
2. செலுத்தவேண்டிய வட்டியானது ஒட்டுமொத்தமாக அதிகரிப்பதால், உங்களுடைய கடனானது மிக அதிகமாக வரும்.

## 4. லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் என்னுடைய கடனை எவ்வாறு பாதிக்கும்?

உங்களுடைய லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் கோரிக்கையானது ஏற்றுக்கொள்ளப்பட்டால், பின்வருவனவற்றில் இருக்கும் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை ஏற்படலாம்:

a. உங்களுடைய மாதாந்திர இ.எம்.ஐ ஆனது குறைக்கப்படலாம், இதனால் மாதா மாதம் திருப்பிச்செலுத்தும் தொகையானது குறையக்கூடும்.
b. உங்களுடைய ஒட்டுமொத்த காலவரையானது அதிகரிக்கும், இதனால் நீங்கள் மீதமிருக்கும் கடனை அடைக்க முடியும். எப்படி இருந்தாலும், கடனுக்கான மீதமுள்ள காலவரையானது நீட்டிக்கப்பட்டு, கட்டணத்திற்கான மொரோட்டோரியம் எதுவும் இல்லாமல், இரண்டு ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்கும் என்பதை தயவு செய்து கவனிக்கவும்.
c. கடனுக்கான காலப்பகுதியில் நீங்கள் செலுத்த வேண்டிய உங்களுடைய மொத்த வட்டியானது அதிகரிக்கும்.

**5. என்னுடைய இ.எம்.ஐ. ஐ நான் செலுத்தவில்லை என்றால் என்னுடைய கடன் ஆனது தானாகவே ரிஸ்ட்ரக்ச்சரிங் செய்யப்படுமா?**

இல்லை. இந்த திட்டத்திற்கு நீங்கள் விண்ணப்பிக்கவில்லை என்றாலோ, அல்லது உங்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட்டாலோ, அட்டவணையில் இருப்பதுபடி நீங்கள் உங்களுடைய இ.எம்.ஐ. யை செலுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கப்படும்.

எந்தவிதமான தாமதம் ஏற்பட்டாலோ அல்லது கட்டணம் செலுத்த தவறிவிட்டாலோ அது தாமதம்/இயல்புநிலை மற்றும் குறிப்பிட்ட அபராதம் / பவுன்ஸ் கட்டணமாகக் கருதப்படும்.

**6. தற்போது என்னுடைய வருமானமானது பாதிக்கப்படவில்லை, ஆனால் ஒருவேளை எதிர்காலத்தில் அப்படி ஏதாவது ஏற்படலாம். எனவே நான் லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு விண்ணப்பிக்கலாமா?**

லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

இருந்தாலும், மேலே குறிப்பிட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையிலும், கடன் தகுதி போன்ற பிற காரணிகளை நாங்கள் உங்கள் விண்ணப்பத்துடன் மதிப்பீடு செய்துவிட்டு, உங்களுடைய லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் கோரிக்கையானது ஃபுல்லர்டன் இந்தியாவின் கொள்கையின் தேவையை பூர்த்தி செய்கிறதா இல்லையா என்பதை நாங்கள் உங்களுக்கு பிறகு தெரிவிப்போம்.

KYONKI DIL AAPKI
NAHI SUNTA,
HUM AAPKI SUNTE HAIN.
#RishtaSammaanKa

**7. லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு ஃபுல்லர்டன் இந்தியாவின் எந்த தயாரிப்புகள் தகுதியானவை?**

பின்வரும் தயாரிப்புகள் ஃபுல்லர்டன் இந்தியாவின் இந்த திட்டத்திற்கு தகுதியானவை:

1. காப்பு ஆவணங்களுக்கு எதிரான லோன்
2. சொத்துக்கு எதிரான லோன்
3. தனிப்பட்ட லோன்கள்
4. இருசக்கர வாகனங்களுக்கான லோன்கள்
5. கமர்ஸியல் வாகனங்களுக்கான லோன்கள்
6. பிஸினஸ் லோன்கள்
7. எம்.எஸ்.எம்.இ லோன்கள் / பாதுகாப்பான பிஸினஸ் லோன்கள்
8. வீட்டு லோன்கள்

* ஃப்ரேம்வொர்க் மற்றும் இந்த திட்டத்திற்கு ஆர்.பி.ஐ வழங்கிய வழிகாட்டுதல்களின்படி ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு தயாரிப்புகளானது பரிசீலிக்கப்படும்.

## 8. லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் திட்டத்திற்கு எப்படி விண்ணப்பிப்பது?

லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு, கீழே இருக்கும் வழிமுறைகளைப் பின்பற்றவும்.

1. பக்கத்தில் மேலே இருக்கும் “எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்” என்ற பகுதியை கிளிக் செய்யவும்.
2. “ஏற்கனவே இருக்கும் வாடிக்கையாளர்” என்பதை தேர்வு செய்து எல்.ஏ.என் (LAN) ஐடி (ஈ), மொபைல் நம்பர் போன்ற உங்களுடைய விவரங்களை உள்ளிடவும் (எண்டர் செய்யவும்).
3. ‘வினாவின் இயல்பு / கோரிக்கை / புகார்கள்’ என்ற ட்ராப்டவுனில் இருந்து ”ஒரு முறைக்கான லோன் ரீஸ்ட்ரக்ச்சரிங்” என்பதை தேர்வு செய்யவும்
4. ’மேலும் விபரங்கள்’ என்ற ட்ராப்டவுனில் இருந்து ”ஒரு முறைக்கான லோன் ரீஸ்ட்ரக்ச்சரிங்” என்ற விருப்பத்தை தேர்வு செய்யவும்
5. அதற்குப் பிறகு, தொற்றுநோய் காரணமாக உங்களுடைய வேலையின் தன்மை, நீங்கள் எதிர்கொண்ட நிதி தாக்கத்தின் நிலை (அல்லது தொடர்ந்து எதிர்கொள்ளும் நிலை) போன்ற சில தகவல்களை தருமாறு கேட்கப்படுவீர்கள்.
6. மேலே இருக்கும் தகவல்களை முடிந்தவரை கவனமாகவும் துல்லியமாகவும் உள்ளிடவும் (எண்டர் செய்யவும்). நீங்கள் இங்கே வழங்கும் தகவலின் அடிப்படையில் இதை மேலும் செயல்படுத்துவதற்கு உங்களுடைய கோரிக்கையானது மதிப்பீடு செய்யப்படும்.
7. அனைத்து தேவையான விவரங்களையும் உள்ளிட்டு விட்டு (எண்டர் செய்துவிட்டு), சரிபார்க்கப்பட்ட பிறகு, “சமர்ப்பிக்கவும் (சப்மிட்)” என்பதைக் கிளிக் செய்யவும்.
8. எங்களுடைய கொள்கையின்படி உங்களுடைய விண்ணப்பமானது தகுதியானதாக இருப்பதாக கருதப்பட்டால், மேற்படி செய்யவேண்டிய செயல்முறைகளுக்காக எங்களுடைய பிரதிநிதியிடமிருந்து உங்களுக்கு அழைப்பு வரும்.

இதற்குத் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்த பிறகு அடுத்ததாக ஃபுல்லர்டன் இந்தியா சரிபார்த்த பிறகுதான் இறுதித் தகுதியானது தீர்மானிக்கப்படும் என்பதை தயவு செய்து நினைவில் கொள்ளவும்.

## 9. லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு என்னென்ன ஆவணங்கள் தேவை?

லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கான ஆவணங்களின் பட்டியல் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

சம்பளம் வாங்குபவர்களுக்கு:

KYONKI DIL AAPKI
NAHI SUNTA,
HUM AAPKI SUNTE HAIN
#RishtaSammaanKa

1. கடந்த 6 மாதங்களுக்கான சேலரி ஸ்லிப்புகள் மற்றும் வங்கி அறிக்கைகள்
2. ஒருவேளை இணை விண்ணப்பதாரராக இருந்தால், அனைத்து தரப்பினருக்கான ஆவணங்களும் கோரப்படும்.
3. கடந்த 6 மாதங்களுக்கான வங்கி அறிக்கைகள்

சுயதொழில் செய்பவர்கள் / நிறுவனங்களுக்கு:

1. கடந்த 12 மாதங்களுக்கான வங்கி அறிக்கைகள்
2. ஜி.எஸ்.டி யை திரும்ப செலுத்துதல்
3. வருமான வரி யை திரும்ப செலுத்துதல்
4. உதயம் சான்றிதழ்
5. ஒருவேளை பல விண்ணப்பதாரர்கள் / நிறுவனங்கள் இருந்தால், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் ஆவணங்களும் தேவைப்படும்.

பாதுகாக்கப்பட்ட லோன்களின் விஷயத்தில், கடன் தொகையைப் பொறுத்து அந்த நேரத்தில் ரிஸ்ட்ரக்ச்சரிங் செய்யப்படும், மேலும் இதற்காக கூடுதலாக இணை ஈடானது தேவைப்பட்டால், அதற்குத் தொடர்பான ஆவணங்களும் கேட்கப்படும். இந்தப் பட்டியலானது எதைக் குறிப்பிடுகிறது என்பதையும் நினைவில் கொள்ளவும், மேலும் பல்வேறு விதமான காரணிகளைப் பொறுத்து கூடுதல் ஆவணங்களும் கேட்கப்படும்.

## 10. என்னுடைய கிரெடிட் வரலாற்றில் லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ன் விளைவானது என்னவாக இருக்கும்?

ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி உங்களுடைய லோன் / கிரெடிட் வசதியானது ”ரிஸ்ட்ரக்ச்சரிங்” செய்யப்பட்டு விட்டது என்று கிரெடிட் ப்யூரோவிற்கு தெரிவிக்கப்படும்.

## 11. ஃபுல்லர்டன் இந்தியாவுடன் எனக்கு பல லோன்கள் உள்ளன. லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு நான் ஒரு முறை மட்டும் விண்ணப்பிக்க வேண்டுமா அல்லது ஒவ்வொரு லோனுக்கும் நான் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டுமா?

உங்களிடம் பலவிதமான லோன்கள் இருந்தால், நீங்கள் தனித்தனியாக ரிஸ்ட்ரக்ச்சரிங் செய்ய வேண்டிய ஒவ்வொரு லோனுக்கும் ஒரு கோரிக்கையை எழுப்ப வேண்டும்.

## 12. நான் சுயதொழில் செய்கிறேன் / நான் எம்.எஸ்.எம்.இ என்ற சிறிய நிறுவனத்தை நடத்தி வருகிறேன். நான் லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு தகுதியானவனா?

| வகைப்பாடு | கூட்டு வரைகூறுகள் | மைக்ரோ | சிறியது | நடுத்தரமானது |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| எம்.எஸ்.எம்.இ – மைக்ரோ, சிறிய மற்றும் நடுத்தரமான நிறுவனங்கள் | ஆலை மற்றும் இயந்திரங்கள் அல்லது கருவிகளில் செய்யும் முதலீடு அதிகமாக இல்லை | ரூ. 1 கோடி | ரூ. 10 கோடி | ரூ. 50 கோடி |
| | ஆண்டு வருவாய் அதிகமாக இல்லை | ரூ. 5 கோடி | ரூ. 50 கோடி | ரூ. 250 கோடி |

இந்திய அரசு அறிவித்திருக்கும் திருத்தப்பட்ட எம்.எஸ்.எம்.இ வகைப்பாட்டின்படி, எம்.எஸ்.எம்.இ பிரிவின் கீழ் வரும் சுயதொழில் செய்யும் நபர்கள் / நிறுவனங்கள் மார்ச் 1, 2020 வரை மொத்த வெளிப்பாடு ஆனது நிதி அல்லாத வசதிகள் உட்பட, வங்கிகள் மற்றும் NBFC களில் ரூ. 25 கோடிக்கும் அதிகமாக இல்லை என்றால் எம்.எஸ்.எம்.இ ரிஸ்ட்ரக்ச்சரிங் திட்டத்தின் கீழே நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகிலிருக்கும் ஃபுல்லர்டன் இந்தியாவின் கிளையையோ அல்லது உங்களுடைய ரிலேஷன்ஷிப் மேலாளரையோ தொடர்பு கொள்ளவும்.

சுயதொழில் செய்யும் எங்களுடைய வாடிக்கையாளர்கள் அரசாங்கத்தின் உதயம் போர்ட்டல் மூலம் தங்களை எம்.எஸ்.எம்.இ ஆக தயவுசெய்து பதிவு செய்து கொள்ளச் சொல்லி ஃபுல்லர்டன் இந்தியா அறிவுறுத்துகிறது

**13. மார்ச் லிருந்து ஆகஸ்ட் 2020 க்கு இடையில் நான் மொரோட்டோரியத்தை எடுக்கவில்லை. லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் திட்டத்திற்கு நான் இப்போது விண்ணப்பிக்கலாமா?**

லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். எப்படி இருந்தாலும், மேலே குறிப்பிட்டுள்ள அளவுகோல்கள் மற்றும் கிரெடிட் மதிப்பு போன்ற பிற காரணிகளின் அடிப்படையில் உங்கள் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்வோம், மேலும் உங்களுடைய லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் கோரிக்கையானது மேலும் செயல்படுத்தப்படுமா என்பது உங்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

**14. என்னுடைய லோன் ஆனது இணை கடன் வாங்குபவர் / கள் உடன் எடுக்கப்பட்டது. திருத்தப்பட்ட ரிஸ்ட்ரக்ச்சரிங் ஒப்பந்தத்தில் கையெழுத்து**

### போடுவதற்கு அசல் கடன் ஒப்பந்தத்தின் அனைத்து இணை கடன் வாங்குபவர்களும் தேவைப்படுவார்களா?

அசல் கடனில் கடன் வாங்கியவர்கள் / இணை கடன் வாங்கியவர்கள் அனைவரும் ரிஸ்ட்ரக்ச்சரிங் ஒப்பந்தம் உட்பட கடன் கட்டமைப்பில் இருக்கும் ஏதாவதொரு மாற்றங்களை ஒத்துக் கொண்டு கையெழுத்து போட வேண்டும்.

### 15. எந்த வகையான லோன்கள் ரிஸ்ட்ரக்ச்சரிங் செய்வதற்கு தகுதியற்றவை?

பின்வரும் லோன் வகைகள் ரிஸ்ட்ரக்ச்சரிங் செய்வதற்கு தகுதியற்றவை:

1. விவசாய நோக்கங்களுக்கான தனிநபர்கள் / நிறுவனங்களுக்கான லோன்கள் ஆனது ஃபுல்லர்டன் இந்தியாவினால் விவசாய கடன்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
2. விவசாய கடன் சங்கங்கள், நிதி சேவையினை வழங்குபவர்கள், மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள், ஃபுல்லர்டன் இந்தியா ஊழியர்கள் போன்றவற்றிற்க்கு வழங்கப்பட்டிருக்கும் லோன்கள்
3. மார்ச் 1, 2020 க்குப் பிறகு மாற்றியமைக்கப்பட்டு இருக்கும் கணக்கிற்கான வீட்டி நிதி நிறுவனங்களின் வெளிப்பாடுகள்
4. வணிக பயன்பாட்டிற்காக வழங்கப்படும் லோன்களை மேலே குறிப்பிட்டுள்ளபடி எம்.எஸ்.எம்.இ வழிகாட்டுதலின் கீழ் நிவாரணம் பெறுவதற்கு உரிமை உண்டு

KYONKI DIL AAPKI
NAHI SUNTA,
HUM AAPKI SUNTE HAIN
#RishtaSammaanKa

### 16. லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு கடைசி தேதி என்ன?

கோவிட்-19 தொற்றுநோயின் நேரடி விளைவினால் நீங்கள் எதிர்கொள்ளும் நிதி இழப்பின் அளவானது உங்களுடைய தகுதியைப் பொறுத்தே அமையும். எனவே நீங்கள் லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு விண்ணப்பிக்க விரும்பினால் அதை நீங்கள் கூடுமானவரைக்கும் மிக விரைவாக விண்ணப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் உங்கள் கோரிக்கையும், விண்ணப்பிக்கும் நேரத்தில் இந்த திட்டம் குறித்த எங்களுடைய கொள்கையையும் ஃபுல்லர்டன் இந்தியா மதிப்பீடு செய்யும்.

### 17. என்னுடைய லோனை ரிஸ்ட்ரக்ச்சரிங் செய்வதற்கு செயலாக்க கட்டணம் அல்லது கட்டணங்கள் ஏதாவது உண்டா?

உங்கள் லோனை ரிஸ்ட்ரக்ச்சரிங் செய்வதற்கு நீங்கள் தேர்வுசெய்தால் ஃபுல்லர்டன் இந்தியா அதற்கு கட்டணம் வசூலிக்கலாம்.

### 18. லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் ற்கு நான் விண்ணப்பித்தால், நான் இன்னும் ஏதாவது மாதாந்திர இ.எம்.ஐ யை செலுத்த வேண்டுமா?

லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங்-ற்கு நீங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தாலும், அது ஏற்றுக்கொள்ளப்படும் வரைக்கும், தற்போதிருக்கும் அட்டவணையின்படி உங்கள் மாதாந்திர இ.எம்.ஐ களை நீங்கள் செலுத்துவீர்கள். உங்களுடைய லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், நீங்கள் திருத்தப்பட்ட அட்டவணையைப் பின்பற்றலாம். கணக்குகள் தொடர்ந்து தரமாக வகைப்படுத்தப்படும் என்பதால் தற்போதைய திருப்பிச் செலுத்தும் அட்டவணையின் படி இந்த ஃப்ரேம்வொர்க்-ன் கீழிருக்கும் தீர்மானத்தை அழைக்கும் தேதி வரைக்கும் இ.எம்.ஐ க்களை சரியான நேரத்தில் செலுத்தப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும். உங்களுடைய லோன் ரிஸ்ட்ரக்ச்சரிங் கோரிக்கையானது நிராகரிக்கப்பட்டுவிட்டால், ஏற்கனவே இருக்கும் அட்டவணையின்படி உங்கள் இ.எம்.ஐ.களை செலுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கப்படும் என்பதை தயவு செய்து நினைவில் கொள்ளவும். எந்தவிதமான தாமதமோ / வழக்கத்திற்கு மாறான இயல்புநிலையோ ஏற்பட்டால் இதற்காக கூடுதல் வட்டியானது வசூலிக்கப்படும் மேலும் இது உங்களுடைய கிரெடிட் ற்கான மதிப்பை பாதிக்கும்.

### 19. நான் இப்போது என்னுடைய இ.எம்.ஐ.களை செலுத்திவிட்டு ரிஸ்ட்ரக்ச்சரிங் யை தேர்வுசெய்யாவிட்டால் என்ன நடக்கும்? இந்த வசதியை நான் பிறகு எடுத்துக் கொள்ளலாமா?

KYONKI DIL AAPKI
NAHI SUNTA,
HUM AAPKI SUNTE HAIN.
#RishtaSammaanKa

உங்களால் இப்போது இ.எம்.ஐ களை செலுத்த முடிந்தால், அவ்வாறு செய்வதற்கு ஃபுல்லர்டன் இந்தியா உங்களை வரவேற்கிறது. இருந்தாலும், இந்த திட்டத்தின் கீழே நிவாரணத்தை ஒரு குறிப்பிட்ட தேதிக்கு முன்னரே வழங்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும் மேலும் உங்களுடைய விண்ணப்பத்தினை குறிப்பிட்ட தேதிக்கு முன்பே சமர்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை உங்கள் விண்ணப்பம் பூர்த்தி செய்தால் மட்டுமே விண்ணப்பமானது ஏற்றுக்கொள்ளப்படும் அத்துடன் துணை ஆவணங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டிருக்க வேண்டும்.

* விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும்

** முன்கூட்டிய கட்டணங்களுக்கு உட்பட்டது. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும்